Time : 180 Mins **நீட் மாதிரி தேர்வு T7 1** **Marks : 800**

1. 'm' நிறையும் 'r' ஆரமும் கொண்ட ஒத்த மூன்று உள்ளீடற்ற கோளங்கள் படத்தில் காட்டியவாறு வைக்கப்படுகின்றன. இரு கோளங்கள் தொட்டுக் கொண்டிருக்கும் புள்ளியிலிருந்து மூன்றாவது உள்ளீடற்ற கோளத்தின் விட்டத்தின் வழியே செல்லும் XX' அச்சைக் கருதுக. XX' அச்சைப் பொருத்து அமைப்பின் நிலைமத் திருப்புத்திறன் ______.



a) 3 mr^2 b) $\frac{16}{5}mr^2$ c) 4 mr^2 d) $\frac{11}{5}mr^2$

2. ஓர் அலை இயற்றியின் மின் நிலைமம் $10-2/\pi$ H,மின்தேக்குத்திறன் 25μF எனில் அதன் ஒத்திசைவு அதிர்வெண்
a) 3140Hz b) 314Hz c) 10^{-3}Hz d) 10^3Hz
3. பிளவுக்குட்படும் யுரேனியம் 235 மாறுநிலை நிறை எவ்வாறு குறைக்கப்படுகிறது
a) நியூட்ரானை உட்கவரும் பொருளால் அதைச் சூழச் செய்தல்
b) அப்பொருளை வெப்பப்படுத்துதல் c) மாசுகளைச் சேர்த்தல்
d) அப்பொருளை பலமாக அடித்தல்
4. மின் காந்த தூண்டலுக்கான சமன்பாடு _______.
a) $e = d/dt(N^2\emptyset)$ b) $e = -d/dt(N\emptyset)$ c) $e = N\emptyset$ d) $e = d/dt(N\emptyset)$
5. ஒரு அணுக்கரு ஒன்றின் ஆரம் ${}^4_9Be$ அணுக்கருவின் ஆரத்தைப் போல் இருமடங்கு என அளவிடப்பட்டுள்ளது. அந்த அணுக்கருவிலுள்ள அணுகருத் துகள்கள் _______.
a) 16 b) 64 c) 72 d) 108
6. ஒரு பொருள் வட்டப்பாதையில் இயங்கக் காரணமாக விசை ______.
a) மையநோக்கு விசை b) மையவிளக்கு விசை c) ஈர்ப்பு விசை
d) எதுவும் இல்லை
7. அணுக்கரு உலையில் தொடர் வினையைக் கட்டுப்படுத்த உதவும் தண்டுகள் _______.
a) கார்பன் தண்டுகள் b) யுரேனியம் தண்டுகள் c) காட்மியம் தண்டுகள்
d) மேற்கண்ட எதுவும் இல்லை
8. ஈர்ப்பு விசை இல்லை எனில் பின்வருவனவற்றில் பாய்மத்திற்கு எது இருக்காது?
a) பாய்மப் பண்பு b) பரப்பு இழுவிசை c) அழுத்தம்
d) ஆர்க்கிமிடிஸின் மேல்நோக்கு அழுத்தவிசை
9. ஆற்றல் அழிவின்மை விதியைக் கூறியவர் ______.
a) பிராண்ட் b) ராபர்ட் மேயர் c) ஜன்ஜூலன் d) டால்டன்
10. திரிபு என்பதற்கு ________.
a) பரிமாணம், அலகு இல்லை b) பரிமாண அளவு மட்டும் உண்டு
c) அலகு மட்டும் உண்டு d) பரிமாண அளவு, அலகு உண்டு
11. யங் இரட்டைப் பிளவு ஆய்வில் பிளவுகளுக்கு இடைப்பட்ட தொலைவு 2மி.மீ. திரைக்கும் பிளவுக்குமிடைத் தூரம் 50 செ.மீ. படும் ஒளியின் அலைநீளம் $5400\mathring{A}$ எனில் பட்டையின் அகலம்_______.
a) 0.135 மி.மீ b) 1.350 மி.மீ c) 0.270 மி.மீ d) 2.700 மி.மீ

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

12. கோண உந்த மாறுபட்டு வீதம் எதற்கு சமம்?
a) விசை b) கோண முடுக்கம் c) திருப்புவிசை d) நிலைமத் திருப்புத்திறன்

13. அடர்த்தி என்பது கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது
a) நிறை / பருமன் b) நிறை x பருமன் c) பருமன் / நிறை
d) இவற்றுள் எதுவுமில்லை

14. ஒரு பொருளின் மீது விசை செயல்படும்போது அதன் செயல்கோடுகள் ஈர்ப்பு மையத்தின் வழியே செல்லவில்லையெனில் அதில் ஏற்படும் நிகழ்வு_______.
a) கோண முடுக்கம் b) நேர்கோட்டு முடுக்கம் c) இவை இரண்டும்
d) எதுவுமில்லை

15. நியூட்ரானால் தூண்டப்பட்ட அணுக்கருச் சிதைவு நிகழ்வைக் கண்டறிந்தவர்கள் _______.
a) ஃபெர்மி b) ஹான்-ஸ்ட்ராஸ்மன் c) ஆபென்ஹெய்மர் d) ரூதர்போர்டு

16. C_1, C_2, C_3 என்ற மின் தேக்குத் திறன்கள் கொண்ட மூன்று மின்தேக்கிகள் பக்க இணைப்பில் இணைக்கப்படும் போது கிடைக்கும் தொகுப்பு மின் தேக்குத் திறன் C யின் மதிப்பு_______.
a) $C_1 - C_2 + C_3$ b) $C_1 + C_2 + C_3$ c) $C_1 - C_2 - C_3$ d) $\frac{C_1C_2C_3}{(C_2C_3+C_3C_1+C_1C_2)}$

17. ஏற்பி ஒன்றில் திருத்தப்பட்ட அலையிலிருந்து தகவல் சைகையைத் திரும்பப்பெற திருத்தப்பட்ட அலை எதன் வழியே அனுப்பப்பட வேண்டும்?
a) ஓர் உறை பிரித்தெடுப்பான் வழியே b) ஒரு சதுரச்சட்ட பிரித்தல் வழியே
c) இடைநிலை அதிர்வெண் (IF) நிலை வழியே d) ஒரு திறன் பெருக்கி வழியே

18. 1 kwh என்பது _______.
a) 3.6×10^4J b) 3.6×10^5J c) $3.6 \times 10^{+6}$J d) 3.6×10^6J

19. ε மின்னியக்கு விசை கொண்ட ஒரு மாறுதிசை மின்னோட்ட மூலத்துடன் இணைக்கப்பட்ட LCR தொடர் சுற்று ஒன்றில் செலவாகும் மின்திறன்_______.
a) $\frac{\varepsilon^2 R}{\sqrt{R^2+(L\omega-1/C\omega)^2}}$ b) $\frac{\varepsilon^2 R}{R^2+\left(L\omega-\frac{1}{C\omega}\right)^2}$ c) $\varepsilon^2\sqrt{R^2+\frac{\left(L\omega-\frac{1}{C\omega}\right)^2}{R}}$ d) $\varepsilon^2\frac{\left[R^2+\left(L\omega-\frac{1}{C\omega}\right)^2\right]}{R}$

20. ஹைட்ரஜன் நிறமாலையில் லைமன் வரிசையின் குறைந்த அலைநீளத்தின் எல்லை λ, எனில் ஃபண்ட் வரிசையின் குறைந்த அலைநீளத்தின் எல்லை_______.
a) 4 λ b) 9 λ c) 16 λ d) 25 λ

21. முடிவிலா வரி மின்னூட்டம் ஒன்று அதிலிருந்து 4cm தொலைவில் $9 \times 10^5 NC^{-1}$ மின்புலத்தை உருவாக்குகிறது. வரி மின்னூட்டத்தின் நீள் அடர்த்தி _______.
a) $10^{-7} Cm^{-1}$ b) $1.5 \times 10^{-5} Cm^{-1}$ c) $2 \times 10^{-6} Cm^{-1}$ d) $0.75 \times 10^{-4} Cm^{-1}$

22. யங் இரட்டைப்பிளவு ஆய்வில் ஒளியூட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட மஞ்சள் ஒளிக்குப் பதிலாக அதேச் செறிவு கொண்ட நீலநிற ஒளியை பயன்படுத்தினால்_______.
a) பட்டை அகலம் குறையும் b) பட்டை அகலம் அதிகரிக்கும்
c) பட்டை அக்காலத்தில் மற்றம் ஏற்படாது d) பட்டைகளின் செறிவு குறையும்

23. ஒரு பொருளின் விடுபடு திசைவேகம் சார்ந்துள்ள நிறை _______.
a) m^o b) m c) m^2 d) m^3

24. சைக்கிள் சக்கரத்தின் குறுக்கே கம்பிகள் இணைக்கப்பட்டிருப்பதன் காரணம் _______.
a) சக்கரத்தின் உறுதியை அதிகரிக்க
b) சக்கரத்தின் நிலைமத் திருப்புத்திறனை அதிகரிக்க
c) சக்கரத்திற்கு நல்ல வடிவம் கொடுக்க d) எதுவும் இல்லை

25. கிடைத்தளத்துடன் 45^0 கோணத்தில் பொருளொன்று எறியபட்டால் அதன் கிடைத்தள வீச்சு எதற்குச் சமம்?

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

a) செங்குத்து உயரத்தைப்போல் நான்கு மடங்கு
b) செங்குத்து உயரத்தைப்போல் இரு மடங்கு
c) செங்குத்து உயரத்தைப்போல் மூன்று மடங்கு d) இவற்றில் எதுவுமில்லை

26. R ஆரமுடைய கோள வடிவக கடத்திக்கு Q. மின்னூட்டம் கொடுக்கப்படுகிறது. கோளத்தின் மையத்தில் மின்னழுத்தம் மற்றும் மின்புலம் முறையே ________.
a) $\frac{Q}{4\pi\epsilon_0 R}$ மற்றும் $\frac{Q}{4\pi\epsilon_0 R^2}$ b) இரண்டும் சுழி c) சுழி மற்றும் $\frac{Q}{4\pi\epsilon_0 R^2}$
d) $\frac{Q}{4\pi\epsilon_0 R}$ மற்றும் சுழி

27. வெப்ப இயக்கவியல் நிகழ்வில் கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியல்ல?
a) வெப்ப மாற்றீடற்ற நிகழ்வில் PV^{γ}=மாறிலி
b)
வெப்ப மாற்றீடற்ற நிகழ்வில் அமைப்பானது சுற்றுப்புறத்திலிருந்து தனிமை படுத்தப்பட்டிருக்கும்
c) பருமன் மாறா நிகழ்வில் அழுத்தம் தொடர்ந்து மாறிலியாக இருக்கும்
d) சமவெப்பநிகழ்வில் வெப்பநிலை தொடர்ந்து மாறிலியாக இருக்கும்

28. PN சந்தி டையோடில் பின்னோக்குச் சார்பு என்பதில்
a) மின்னோட்டம் பாயாது b) அதிக அளவு மின்னோட்டம் பாயும்
c) சந்தியில் மின்னழுத்த அரண் அதிகமாகும் d) இயக்கமில்லாத் தடை குறையும்

29. குறிப்பிட்ட உயரத்திலிருந்து பந்து ஒன்று கீழே விழுகிறது. பின்வருவனவற்றுள் எப்படம் பந்தின் இயக்கத்தினைச் சரியாக விளக்குகிறது?
a)  b)  c)  d) 

30. ஒரு சமதள முன்னேறு அலைகள் முன்னேறிச் செல்லும் போது________.
a) எல்லாத் துகள்களின் வீச்சும் சமம்
b) ஊடகத்தின் துகள்கள் தனிச்சீரிசை இயக்கத்தை மேற்கொள்ளும்
c) அலையின் திசைவேகம் ஊடகத்தின் தன்மையைப் பொறுத்தது.
d) மேற்கண்ட அனைத்தும்

31. பயன் தொடக்க அதிர்வெண் என்பது சிறும அதிர்வெண் அதற்குக் கீழே ________.
a) ஒளி மின்னோட்டம் மாறிலியாகும்
b) மின்னழுத்தம் அதிகரிக்கும் போது மின்னோட்டமும் அதிகரிக்கும்
c) மின்னழுத்தம் குறையும்போது மின்னோட்டமும் குறையும்
d) ஒளி மின் விளைவு ஏற்படுவதில்லை

32. பின்வரும் வாயுக்களில், எவ்வாறு கொடுக்கப்பட்ட வெப்பநிலையில் குறைந்த சராசரி இருமடிமூல வேகத்தை (v_{rms}) பெற்றுள்ளது?
a) ஹைட்ரஜன் b) நைட்ரஜன் c) ஆக்சிஜன் d) கார்பன் - டை - ஆக்ஸைடு

33. சுருள் வில் மீதமைந்த பலகையின் மீதிருந்து துள்ளிக் குதிக்கும் நீச்சல் வீரர், நீரின் மீது விழுமுன், காற்றில் பல குட்டிக் கரணங்களிடும் போது, மாறாதது எது?
a) நேர்கோட்டு உந்தம் b) நிலைமத் திருப்புத்திறன் c) இயக்க ஆற்றல்
d) கோண உந்தம்

34. ஃப்ரான் ஹோபர் ஒற்றைப் பிளவு விளிம்பு விளைவு முறையில் 600$\mathring{A}$.அலைநீளம் கொண்ட ஒளி பயன்படுத்தப்பட்டு மத்திய பொலிவு அளக்கப்பட்டது.மற்றொரு அலைநீளமுடைய ஒளியை பயன்படுத்திய போது மத்திய பொலிவின் கோண அகலம் 30 % குறைந்தது.இரண்டாவது நிகழ்வில் பயன்படுத்தப்பட்ட ஒளியின் அலைநீளம்________.
a) 4200 $\mathring{A}$ b) 5893 $\mathring{A}$ c) 6000 $\mathring{A}$ d) 7200 $\mathring{A}$

35. நியூக்ளியஸ் அமைப்பின் அளவிற்கான அலகு _______.
a) ஆம்ஸ்ட்ராங் b) மைக்ரான் c) நேநோ d) பெர்மி

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

36. இரு மலைக்குன்றுகளுக்கு இடையே நிற்கும் ஒருவர் துப்பாக்கியிலிருந்து தோட்டா மூலம் சுடுகிறார். முதல் எதிரொலி 3 விநாடிகளுக்குப் பிறகும் இரண்டாவது எதிரொலி 5 விநாடிகளுக்குப் பிறகும் கேட்கப்படுகிறது. காற்றில் ஒலியின் வேகம் 330 ms^{-1}, எனில் இரு மலைக்குன்றுகளுக்கு இடைப்பட்டத் தொலைவு ________.

a) 550 m b) 770 m c) 1320 m d) 1530 m

37. ஊடகத்தின் வெப்பநிலை மாறும்போது _______ மாறும்

a) ஒலி அலைகளின் அதிர்வெண் b) ஒலி அலைகளின் வீச்சு
c) ஒலி அலைகளின் அலைநீளம் d) ஒலி அலைகளின் உரப்பு

38. X-கதிர்களை மின்புலத்தாலும் ,காந்த புலத்தாலும் விலகல் அடைவதில்லை,ஏனெனில் அவை________.

a) குறைந்த அலைநீளம் கொண்டவை b) கண்ணுக்கு புலனாவதில்லை
c) மின்சுமை கொண்ட துகள்கள் அல்ல d) அதிக ஊடுருவும் திறன் கொண்டது

39. ஒரு பொருளின் கோணம் : 18.20, அதன் கோண விட்டத்தை ரேடியனில் கூறு _______.

a) 36.4 ரேடியன் b) 3.64 x 10^{-2} ரேடியன் c) 31.74 x 10^{-2} ரேடியன் d) 3.17 ரேடியன்

40. விசையின் தாக்கத்தின் பரிணாமங்கள் _______.

a) MLT^{-2} b) MLT^{-1} c) ML^2T^{-1} d) ML^2T^{-1}

41. பரவளையத்தைக் குறிக்கும் சமன்பாடு ....

a) y = kx b) y = -kx c) y = kx^2 d) y = $-kx^2$

42. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனித்து சரியான விடையை தெரிந்தெடு:

I. ஜேம்ஸ் பிரிஸ்கோட் ஜூல், பிரிட்டனை சேர்ந்த மிகசிறந்த அறிவியல் அறிஞர்.
II. உயிருள்ள வகைகளும், இயந்திரங்களும் வேலை செய்வதற்கு ஆற்றல் தேவைப்படுகிறது.

a) (I) மற்றும் (II) இரண்டுமே உண்மை. b) (I) மற்றும் (II) இரண்டுமே உண்மையல்ல.
c) (I) சரி (II) தவறு d) (I) தவறு (II) சரி

43. ஒரு பொருளின் நிறை மற்றும் திசைவேகத்தை அளவிடுகையில் ஏற்பட்ட சதவீதப்பிழை முறையே 1% மற்றும் 2% எனில் அதன் இயக்க ஆற்றலை அளவிடும் போது ஏற்படும் சதவீதப்பிழை_____.

a) 5% b) 2% c) 1% d) 3%

44. l நீளம் கொண்ட ஒரு இலகுவானத் தண்டின் இரு முனைகளிலும் m_1 மற்றும் m_2 நிறைகள் இணைக்கப்பட்டுள்ளன. தண்டின் தளத்திற்கு செங்குத்தாகவும் நிறைகளின் மையம் வழியாகவும் செல்லும் அச்சைப் பொருத்து அமைப்பின் நிலைமத் திருப்புத்திறன் _______.

a) $\left(\frac{m_1 m_2}{m_1+m_2}\right)l^2$ b) $\left(\frac{m_1+m_2}{m_1 m_2}\right)l^2$ c) $(m_1+m_2)l^2$ d) $\sqrt{m_1 m_2}\, l^2$

45. 1 லிட்டர் கொள்ளளவு கொள்ளக்கூடிய கலன் ஒன்றினுள் அதன் வெப்பநிலை மாறாநிலையில் 1 வளிமண்டல அழுத்தத்துடன் 2 லிட்டர் O_2 வாயுவும் 0.5 வளிமண்டல அழுத்தத்துடன் 2 லிட்டர் N_2 வாயுவும் செலுத்தப்படுகிறது. கலனில் மொத்த அழுத்தம்________. (வளிமண்டல அழுத்தத்தில்)

a) 1.5 b) 1 c) 0.5 d) 2

46. தொலைக்காட்சிப் பரப்புதலில்

(i) படக்காட்சி அலைகளும் இசைவுத் துடிப்புகளும்,
(ii) ஒலி அலைகளும்

a) முறையே அலைவீச்சுப் பண்பேற்றமும்,அதிர்வெண் பண்பேற்றமும் செய்யப்படுகின்றன
b) முறையே அதிர்வெண் பண்பேற்றமும், அலைவீச்சுப் பண்பேற்றமும் செய்யப்படுகின்றன
c) அலைவீச்சுப் பண்பேற்றமும் செய்யப்படுகின்றன
d) அதிர்வெண் பண்பேற்றம் செய்யப்படுகின்றன

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்

RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

47. சீரான வட்ட இயக்கத்தின் விட்டத்தின் மீதான வீழ்ச்சி எவ்வகை இயக்கமாகும்?
a) கோண இயக்கம் b) தனிச் சீரிசை இயக்கம் c) வட்ட இயக்கம்
d) இவை அனைத்தும்

48. பின்வருவனவற்றில் எது திணிப்பு அலைவாகக் கருதப்படுகிறது?
a) குழாய் கருவிகளில் ஒலி உருவாதல்
b) பியானோ கருவிக் கம்பியில் அதிர்வு ஏற்படுதல்
c) கம்பிக்கருவிகளில் ஒலி உருவாதல் d) இவற்றில் எதுவுமில்லை

49. A, B மற்றும் C என்ற மூன்று ஒளி டையோடுகள் முறையே 2.03 eV, 2.48 eV மற்றும் 3.12eV, மதிப்புடைய பட்டை இடைவெளி கொண்டவைகளாக உருவாக்கப் பட்டுள்ளன. இவற்றில் எந்த டையோடுகளை பயன்படுத்தி 500 nm அலைநீள ஒளியைக் கண்டுணர முடியும்?
($\frac{hc}{e}$-ன் எண்மதிப்பு = 12.43×10^{-7})
a) A மற்றும் B b) A, B மற்றும் C c) B மற்றும் C d) A மற்றும் C

50. படத்தில் காட்டியவாறு 45° படுகோனத்தில் முப்பட்டகம் ஒன்றின் மீது விழும் படுகதிர் முழு அக எதிரொலிப்பு அடைய முப்பட்டகப் பொருளின் ஒளிவிலகல் எண் μ மதிப்பிற்கான நிபந்தனை_______.



a) $\mu = \frac{3}{2}$ b) $\mu > \frac{3}{2}$ c) $\mu > \sqrt{\frac{3}{2}}$ d) $\mu = \sqrt{\frac{3}{2}}$

51.

	பட்டியல் I		பட்டியல் II
A	கல்குஷ்டம்	1	CO
B	உயிர்ப் பெருக்கம்	2	பசுமைக்குடில் வாயுக்கள்
C	உலக வெப்பமயமாதல்	3	அமிலமழை
D	ஹீமோகுளோபினுடன் இணைதல்	4	DDT

a)

A	B	C	D
1	2	3	4

b)

A	B	C	D
3	4	2	1

c)

A	B	C	D
2	3	4	1

d)

A	B	C	D
4	2	1	3

52. கீழ்கண்ட சேர்மங்களில் எது சாயத் சோதனை புரிகிறது?
a) அனிலின் b) மெத்திலமீன் c) டைபினைலமீன் d) எத்திலமீன்

53. ஒரு சகப்பிணைப்பானது பின்வரும் எந்த அளவீட்டுக் காரணிகளால் வரையறுக்கப்படுகிறது?
a) பிணைப்பு நீளம் b) பிணைப்புக் கோணம் c) பிணைப்புத் தரம்
d) இவை அனைத்தும்

54. ஹேலஜன் அமிலங்களின் உருவாதல் வெப்பத்தின் சரியான வரிசை______.
a) HI > HBr > HCl > HF b) HF > HCl > HBr > HI c) HCl > HF > HBr > HI d) HCl > HBr > HF > HI

55. ஹீமோகுளோபினுடன் O_2 மற்றும் CO வினை புரிந்து தருவது
a) ஆக்ஸிஜன் - ஹெமி அணைவு மட்டும் b) CO - ஹெமி அணைவு மட்டும்
c)
இரண்டும், ஆனால் ஆக்ஸிஜன் -
ஹெமி அணைவு மிகுந்த நிலைப்புத் தன்மை உடையது.
d) இரண்டும், ஆனால் CO -ஹெமி அணைவு மிகுந்த நிலைப்புத் தன்மை உடையது.

56. ஆய்வகத்தில் இவ்வினை மூலம் சிலிகனை தயாரிக்கலாம்

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

a) கார்பனை மின் உலையில் வெப்பப்படுத்தி
b) பொட்டாசியத்தை பொட்டாசியம் டைக்குரோமேட்டுடன் வெப்பப்படுத்தி
c) மெக்னீசியத்துடன் சிலிகா d) இவற்றில் எதுவுமில்லை

57. இதற்கு விலங்கு ஸ்டார்ச் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.
a) கிளைக்கோஜன் b) லாக்டோஜன் c) செல்லுலோஸ் d) ஏதுமில்லை

58. கீழ்க்கண்டவற்றில் மிகவும் காரத்தன்மையுடைய சேர்மம்
a) பென்சைலமீன் b) அனிலின் c) அசிட்டானிலைடு d) p -நைட்ரோ அனிலின்

59. $CH_3 - O - CH(CH_3)_2 + HI \rightarrow$ விளைபொருள்;
a) $CH_3OCI(CH_3)_2$ b) $CH_3I + (CH_3)_2CHOH$ c) $CH_3OH + (CH_3)_2CH$ d) $ICH_2OCH(CH_3)_2$

60. அமைப்பின்படி, செல்லுலோஸ் என்பது இதன் நேர்கோட்டுப் பலபடியாகும்________..
a) சுக்ரோஸ் மூலக்கூறுகள் b) β-D- குளுக்கோஸ் மூலக்கூறுகள்
c) α - குளுக்கோஸ் மூலக்கூறுகள் d) ப்ரக்டோஸ் மூலக்கூறுகள்

61. கீழ்க்கண்டவற்றில் எந்த ஒன்று, ஒரு சங்கிலித்தொடர் வளர்ச்சி பலபடியாகும்?
a) ஸ்டார்ச் b) நியூக்கிளிக் அமிலம் c) பாலிஸ்டைரீன் d) புரதம்

62. ஈத்தேனின் மறைத்தல் மற்றும் எதிரெதிர் வச அமைப்புகளை ஒப்பிடும் போது பின்வருவனவற்றுள் சரியானக் கூற்று எது?
a)
ஈத்தேனின் மறைத்தல் வச அமைப்பில் முறுக்க திரிபு காணப்படினும் எதிர் எதிர் வச அமைப்பைக் காட்டிலும் மறைத்தல் வச அமைப்பு அதீத நிலைப்புத் தன்மை உடையது.
b)
ஈத்தேனின் எதிரெதிர் வச அமைப்பானது மறைத்தல் வச அமைப்பைக் காட்டிலும் அதிக நிலைப்புத் தன்மை உடையது ஏனெனில் எதிரெதிர் அமைப்பில் முறுக்கத் திரவ ஏதுமில்லை .
c)
ஈத்தேனின் எதிரெதிர் வச அமைப்பானது மறைத்தல் வச அமைப்பினைக் காட்டிலும் குறைவான நிலைப்புத் தன்மை உடையது ஏனெனில் எதிரெதிர் அமைப்பில் முறுக்கத் திரிபு காணப்படுகிறது.
d)
ஈத்தேனின் எதிரெதிர் வச அமைப்பானது மறைத்தல் வச அமைப்பினைக் காட்டிலும் குறைவான நிலைப்புத் தன்மை உடையது ஏனெனில் எதிரெதிர் அமைப்பில் முறுக்கத் திரிபு காணப்படுவதில்லை

63. கீழ்கண்ட அயனிகளில் மிக அதிக பாராக்காந்தத் தன்மையுடைது எது?
a) $[Cr(H_2O)_6]^{3+}$ b) $[Fe(H_2O)_6]^{3+}$ c) $[Ni(H_2O)_6]^{2+}$ d) $[Zn(H_2O)_4]^{2+}$

64. அயனி ஆரம் கீழ்க்கண்ட எந்த பண்பிற்கு எதிர் விகிதத்தில் உள்ளது.
a) அணு எண் b) அணு நிறை c) நிகர அணுக்கருமின் சுமை
d) மறைத்தல் மாறிலி

65. ஹைடிரஜன் பெராக்ஸைடு __________என்பவரால் முதன் முதலில் தயாரிக்கப்பட்டது.
a) யூரே b) L.J.தெனார்டு c) ஹாப்மென் d) காவன்டிஷ்

66. 6.92g HCl உடன் வினைபுரியும் CaO வின் நிறை_______.
a) 7.31g b) 5.62g c) 10.62g d) 5.31g

67.

a) 2 - அசிட்டாக்ஸி பென்சாயின் அமிலம் b) மெத்தில் சாலிசிலேட்
c) மெத்தில் பென்சோலேட் d) 2 - மீத்தாக்ஸி பென்சாயிக் அமிலம்

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

68. $\begin{matrix} CHO \\ | \\ CHO \end{matrix} \xrightarrow{OH^-} X$; விளைபொருள் X ஆனது

a) $CH_3OH + CH_3OH$ b) $CH_2OH\text{-}COO^-$ c) $CH_3OH + KCOOH$ d) $^-OOC\text{- }COO^-$

69. XeO_2F_2 அமைப்பு இதனை ஒத்தது

a) NH_4^+ b) SiF_4 c) SF_4 d) BF_4^-

70. எச்சேர்மம் ஆல்டோஹெக்சோஸ் ஆகும் ?

a) சுக்ரோஸ் b) குளுக்கோஸ் c) ப்ரக்டோஸ் d) செல்லுலோஸ்

71. கீழ்க்கண்டவற்றில் எது புற்றுநோயை உண்டாக்கும் ஹைட்ரோ கார்பனல்ல?

a) பென்சீன் b) 1,2-பென்ஸ்பைரின் c) 1,2-பென்சான்திரசீன் d) டொலுவீன்

72. கீழ்க்கண்ட அமின்களுக்கான வினைகளில் தவறான வினையைத் தேர்ந்தெடு

a) $(CH_3)_3NH+NaNO_2+HCl\ (CH_3)_2 \rightarrow N\text{-}N{=}O$ b) 

c) $CH_3CH_2NH_2+HNO_2 \rightarrow CH_3CH_2OH+N_2$ d) $CH_3NH_2+C_6H_5SO_2Cl \rightarrow CH_3NHSO_2C_6H_5$

73. ஒரு வினையின் 1/T எதிர் lnk வரைபடத்தின் சாய்வு -1×10^4 K ஆகும்.வினையின் கிளர்வுறு ஆற்றல்________. ($R = 8.314\ JK^{-1}\ mol^{-1}$)

a) $8314\ J\ mol^{-1}$ b) $1.202\ J\ mol^{-1}$ c) $1202\ KJ\ mol^{-1}$ d) $83.14\ KJ\ mol^{-1}$

74. கீழ்கண்டவற்றில் எது இடைநிலை ஹைட்ரைடுகள்?(interstitial)

a) கார மற்றும் காரமண் உலோகங்கள் b) ஹேலஜன்கள் c) உலோகப்போலிகள்
d) இடைநிலைத் தனிமங்கள்

75. பேக்கலைட் பின்வருவனவற்றுள் எதன் பல்படி.

a) ஃபீனால் - பார்மால்டிஹைடு b) பீனால் - அசிட்டால்டிஹைடு
c) பியூட்டாடையீன் - எத்தில் ஆல்கஹால்
d) பியூட்டா டையீர் - அக்ரிலோ நைட்ரல்

76. Cl_2 மூலக்கூறின் பிணைப்பு நீளம் ______.

a) $0.74A^0$ b) $1.44A^0$ c) $1.98A^0$ d) $2.28A^0$

77. சோடியம் பீனாக்ஸைடுடன் - 1 - புரோமோ பியூட்டேன் உடன் வினையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய கரிம பதிலீட்டு வினை விளைபொருள்_______.

a) $C_6H_5COCH_2CH_2CH_2CH_3$ b) $C_6H_5OCH_2CH_2CH_2CH_3$ c) 

d) 

78. ΔH-ற்கும் ΔEக்கும் உள்ள சரியான தொடர்பு______.

a) $\Delta H = \Delta E + RT$ b) $\Delta E = \Delta H + RT$ c) $\Delta H = \Delta E + (RT)\Delta_n$ d) $\Delta H = \Delta E + \Delta nRT$

79. கீழ்க்கண்டவற்றில் எது உர்ட்ஸ்-பிட்டிக் வினையைக் குறிப்பிடுகிறது?

a) $C_6H_5I + 2Na + CH_3I \rightarrow C_6H_5CH_3 + 2NaI$ b) $2C_6H_5I + 2Na \rightarrow C_6H_5C_6H_5 + 2NaI$
c) $2CH_3CH_2I + 2Na \rightarrow CH_3CH_2CH_2CH_3 + 2NaI$ d) $C_2H_5ONa + C_2H_5I \rightarrow C_2H_5\text{-}O\text{-}C_2H_5 + NaI$
e) $CH_3Br + AgF \rightarrow CH_3F + Ag\ Br$

80. வணிக ரீதியாக கிடைக்கும் ஹைட்ரஜன் பெராக்சைடு கரைசலின் செறிவு______.

a) 0.5%(w/v) b) 1 % (w/v) c) 3 % (w/v) d) 5 % (w/v)

81. ln K Vs 1/T ஆகியவற்றிற்கு இடையேயான வரைபடத்திற்கு கிடைக்கும் நேர்கோட்டின் சாய்வின் மதிப்பு ________.

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

a) $-\frac{Ea}{RT}$ b) $-\frac{Ea}{R}$ c) $\frac{Ea}{RT}$ d) $\frac{Ea}{R}$

82. பால்மம் என்பது கீழ்கண்டவற்றின் கூழ்மக் கரைசல்
a) இரண்டு திண்மங்கள் b) இரண்டு நீர்மங்கள் c) இரண்டு வாயுக்கள்
d) ஒரு திண்மம் மற்றும் ஒரு நீர்மம்

83. பல் மருத்துவம் மற்றும் சிறு அறுவை சிகிச்சையில் பயன்படும் மயக்க மருந்து______.
a) நைட்ரஸ் ஆக்சைடு b) நைட்ரிக் ஆக்சைடு c) நைட்ரஸ் ஆக்ஸைடு $+O_2$
d) நைட்ரஜன் டை ஆக்சைடு

84. கீழ்கண்ட ஒவ்வொரு உப்பும் 255ºC ல் 1.0×10^{-9} என்ற K_{sp} ஐ பெற்றிருப்பின், எது நீரில் மிகக் குறைவாக கரையும்?
a) XY b) XY_2 c) X_3Y d) X_2Y_3

85. ஃபீனாலில் இருந்து P-ஹைட்ராக்சி ஐசோபென்சீனைத் தயாரிக்கும் வினையின் பெயர்________.
a) டையஸோ ஆக்கல் b) இணைப்பு வினை c) கோல்ப் வினை
d) ஸ்காட்டன்- பௌமன் வினை

86. எச்சேர்மம் ஒளியிலும் காற்றிலும் சிவப்பாக மாறுகிறது
a) ஃபீனால் b) ஈதர் c) பிக்ரிக் அமிலம் d) பென்சைல் குளோரைடு

87. கீழ்க்கண்டவற்றில் எந்த ஒன்று உர்ட்ஸ்-பிட்டிக் வினை ஆகும்?
a) $CH_3Br + AgF \rightarrow CH_3F + AgBr$ b) $C_6H_5I + 2Na + CH_3I \rightarrow C_6H_5CH_3 + 2NaI$
c) $C_2H_5Br + 2Na \rightarrow C_2H_5 - C_2H_5 + 2NaBr$ d) $CH_3ONa + C_2H_5Br \rightarrow C_2H_5OCH_3 + NaBr$

88. நீர் ஈனியாகச் செயல்படும்போது அழைக்கப்படும் பெயர்
a) ஹட்ரோ b) அக்வா c) அக்வோ d) ஹைட்ராஜன் ஆக்சைடு

89. 4-மூவிணைய பியூட்டைல் டொலுவீனுடன் N-புரோமோ சக்சினமைடு வினைபுரிந்து தருவது.

a) b)  c)  d) 

90. குளுக்கோஸ் மற்றும் ப்ரேக்டோஸின் ஒளிச்சுழற்சி மாற்றுகளின் எண்ணிக்கை முறையே
a) 16, 8 b) 8, 16 c) 8, 4 d) 4, 8

91. தவறான கூற்றை கண்டறிக.
a)
ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள், குறைவான நேர்மின்சுமையைப் பெற்றுள்ள நேர்மின் அயனி, குறைவான அயனி ஆரத்தினை பெறும்.
b)
ஐசோ எலக்ட்ரானிக் உறுப்புகளுள்,அதிகமான எதிர்மின் சுமையைப் பெற்றுள்ள எதிர்மின் அயனி, அதிகமான அயனி ஆரத்தினை பெறும்.
c)
தனிமவரிசை அட்டவணையில் முதல் தொகுதியில் மேலிருந்து கீழாக வரும்போது தனிமங்களின் அணு ஆரம் அதிகரிக்கின்றது.
d)
தனிமவரிசை அட்டவணையின் இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக செல்லும்போது அணு ஆரம் குறைகிறது

92. கீழ்கண்ட நைட்ரஜன் சேர்மங்களில் எது ஹாப்மன் வினைபுரியும் என குறிப்பிடு.(Br_2 மற்றும் வழிய NaOH உடன் வினைபுரிகிறது $R-NH_2$ என்ற ஓரிணைய அமீனை தரும்)
a) $RCONHCH_3$ b) $RCOONH_4$ c) $RCONH_2$ d) R-CO-NHOH

93. மாசுபடுதல் என்பது ______.

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

a) மேற்பரப்பு மணல் நீக்கப்படுத்தல்
b) சுற்றுசூழலில் நச்சுத்தன்மை மற்றும் தேவையற்ற பொருட்கள் வெளியிடப்படுவது.
c) ஆற்றல் பேணப்படுதல் d) மேற்கண்ட அனைத்தும்

94. எதிர் ஏற்றத்திற்கு எடுத்துக்காட்டு
a) β -கரோட்டின் b) நெக்டரின் c) லானோலின் d) பெனிசிலின்

95. டிரிட்டியம் ______ ஹைட்ரஜன் அணுக்களுக்கு, ஒரு டிரிட்டியம் அணு என்ற விகிதத்தில் உள்ளது.
a) 10^3 b) 10^8 c) 10^{18} d) 10^{28}

96. Al_2O_3 மற்றும் Cr_2O_3 ஆகியவற்றின் உருவாதல் என்தால்பி மதிப்புகள் முறையே -1596kj மற்றும் -1134kj எனில் $2Al+Cr_2O_3 \rightarrow 2Cr+Al_2O_3$ என்ற வினைக்கு ΔH மதிப்பு______.
a) -1365kj b) 2730kj c) -2730kj d) -462kj

97. உந்திகளுக்கு ஒரு உதாரணம்
a) பலித்தீன் b) ஹைடிரசின் c) ஸ்டைரின் d) லானோலின்

98. 10 கி. ஹைட்ரஜன் வாயு ஒரு லிட்டர் கொள்கலனின் வைக்கப்பட்டால் அதன் மோலார் செறிவு ________.
a) 5 மோல்கள்/லிட்டர்$^{-1}$ b) 20 மோல்கள்/லிட்டர்$^{-1}$ c) 10 மோல்கள்/லிட்டர்^{1}
d) 15 மோல்கள்/லிட்டர்$^{-1}$

99. உடனிசைவை பொறுத்த அளவில்,கீழ்கண்டவற்றில் எது தவறு?
a) பங்களிக்கும் அனைத்து அமைப்புகளிலும்,இணையாகாத எலக்ட்ரான்களின் எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டும்
b) பங்களிக்கும் அமைப்புகளின் உட்கருவின் நிலைகள் மாறுபடலாம்
c) அனைத்து பங்களிக்கும் அமைப்புகளின் ஆற்றலும் ஏறத்தாழ சமமாக இருக்க வேண்டும்
d) மிகவும் நிலையான அமைப்புடைய பங்களிக்கும் அமைப்பு அதிகமாக பங்களிக்கிறது

100. அமோனியாவுடன் சேர்க்கை வினைபொருளைத் தரும் சேர்மம்
a) அசிட்டால்ஹைடு b) அசிட்டைல் குளோரைடு c) பார்மால்டிஹைடு
d) அசிட்டோன்

101. கிளோடோகிராம் என்னும் மன வரைபடத்தினை அறிமுகப்படுத்தியவர்
a) அரிஸ்டாட்டில் b) R.H. விட்டேக்கர் c) எர்ணஸ்ட் d) கரோலஸ் லின்னயஸ்

102. செல் உடலத்தில் ஒற்றை ஆக்ஸானுடன் மட்டுமே உள்ள பண்புகள் உடையது.
a) ஒரு முனை நியூரான் b) பொய்யான ஒரு முனை நியூரான்
c) இரு முனை நியூரான் d) பல முனை நியூரான்

103. மரபணு மாற்றும் செய்யப்பட் தங்க அரிசியில் சேர்க்கப்பட்ட ஜீன் (மரபணு)உருவாக்குவது
a) வைட்டமின் b) ஒமேகா c) வைட்டமின் A d) வைட்டமின் B

104. கற்றறிதல் மரபுப் பண்பாகலாம் என்பதை நிலைநிறுத்த முயன்றவர்
a) லாமார்க் b) எஃபி சம்னர் c) மெக் டூகால் d) காமரெர்

105. சைனோவியல் மூட்டு ஒரு
a) பந்து கிண்ண மூட்டு b) முளை அச்சு மூட்டு c) கீல் மூட்டு
d) இவை அனைத்தும்

106. மென்தசைகள் என்பவை
a) இயங்கு தசை, கதிர் வடிவம், வரியற்ற தசை
b) இயங்கு தசை, பல உட்கரு உடைய, உருளை வடிவம் உடையவை

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

c) இயங்கு தசை, உருளை வடிவம், வரியுடையவை
d) இயங்கு தசை, கதிர் வடிவம், ஒற்றை உட்கரு உடையவை

107. மழைக்காலங்களில் மரக்கதவுகள் உப்புகின்றன இதற்குக் காரணம்
a) நீராவிப் போக்கு b) உள்ளீர்த்தல் c) எக்ஸாஸ்மாசிஸ் d) நீர்போக்கு

108. தூய்மை மேம்பாடு திட்டம் _______ (2007) எனவும் வரையறுக்கலாம்.
a) க்யோட்டா ஒப்பந்தம் b) மான்ட்ரியல் ஒப்பந்தம் c) CDM செயல் திட்டம்
d) (அ) மற்றும் (இ)

109. BCG வாக்சின் கட்டுப்படுத்துவது
a) டைபாய்டு b) காலரா c) காசநோய் d) டிப்தீரியா

110. ஒரு யூரியா மூலக்கூறு உருவாகத் தேவைப்படும் A.T.P. மூலக்கூறுகளின் எண்ணிக்கை
a) 38 b) 32 c) மூன்று d) மேற்கண்ட எதுமில்லை

111. எலக்ட்ரான் கடத்து சங்கிலியின் இறுதி ஆக்சிஜனேற்றத்தின் போது O_2-க்கு எலக்ட்ரான்களை வழங்கும் சைட்டோகுரோம்
a) சைட்டோகுரோம்-b b) cyto -C c) cyto -a_3 d) cyto -f

112. அல்லீல் என்பது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
a) மெண்டல் b) பேட்டிசன் c) வாட்சன் d) மார்கன்

113. கோள வடிவ பாக்டீரியா இவ்வாறு அழைக்கப்படுகிறது
a) காக்கஸ் b) பேசில்லஸ் c) விப்ரியோ d) ஸ்பைரில்லம்

114. நோய் தடைக்காப்பு குறித்த சரியான கூற்று எது?
a)
கட்டுவிரியன் கடித்தால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆன்டிபாடிகள் உட்செலுத்தப்பட வேண்டும்
b)
பெரியம்மை நோய்க்கான ஆன்டிபாடிகள் T-லிம்போசைட்டுகளால் உருவாக்கப்படுகின்றன
c)
ஆன்டிபாடிகள் புரத மூலக்கூறுகளாகும். அவை ஒவ்வொன்றிலும் நான்கு இலேசான சங்கிலிகள் காணப்படுகின்றன
d) B-லிம்போசைட்டுகளின் பணி சிறுநீரக கிராப்டை நிராகரிப்பதாகும்.

115. கீழ்கண்ட எந்த உறுப்பில் அம்மோனியா, யூரியாவாக மாறுகிறது?
a) கல்லீரல் b) நுரையீரல் c) சிறுநீரகம் d) சிறுகுடல்

116. கீழ்கண்ட தொகுதியை அதில் காணப்படும் விலங்குகளின் பண்புகளோடு சரியாக பொருத்தவும்.

	விலங்கு தொகுதி	**பண்புகள்**
I	பிளாட்டிஹெல்மின்தஸ்	a. உயிரொளிர்தல்
II	அன்னலிடா	b. மெட்டாஜெனிசிஸ்
III.	நிடோரியா	c. மெட்டாமெரிசம்
IV.	டினோஃபோரா	d. சுடர் செல்கள்

a)

I	II	III	IV
a	b	d	c

b)

I	II	III	IV
d	c	b	a

c)

I	II	III	IV
b	d	c	b

d)

I	II	III	IV
c	a	b	d

117. இலையடி உறை உடைய இலை, மூவங்கப்பூ இணை நரம்பு அமைப்பு ஆகிய பண்புகள் காணப்படுவது
a) இருவித்திலைத் தாவரம் b) ஒருவித்திலைத் தாவரம் c) மானோகிளைமேடே
d) யூஃபோர்பியேசியே

118. சுற்றுச்சூழல்நிலையில் வேறுபட்ட இலைகளைக் கொண்டுள்ள தாவரம்
a) பருத்தி b) கொத்தமல்லி c) லார்க்ஸ்பர் d) பட்டர் கப்

119. ஒரு பசுங்கணிகத்தில் புரோட்டான்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுவது

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

a) சவ்வுகளுக்கிடையேயான இடைவெளியில் b) ஆன்டென்னா குழுமத்தில்
c) ஸ்ட்ரோமா d) தைலக்காய்டுகளின் உட்பகுதியில்

120. உச்சரேரியா பான்கிராஃப்டியின் லார்வா நிலையை ஒழிக்க பயன்படும் மருந்து
a) ரைஃபாம்பிசின் b) பைராஸினமைட் c) ஹெட்ரசான் d) ஆமெண்டிடின்

121. SCID எனப்படுவது
a) கடுமையான ஒருங்கிணைந்த நோய் ஏதிர்ப்பு குறைபாடு
b) கடுமையான பிறவிக் குறைபாடான நோய் எதிர்ப்பு
c) பட்டியலிடப்பட்ட தொடர்ந்த நோய் எதிர்ப்புக் குறைபாடு
d) பல ஒன்று சேர்ந்த குழந்தைகள் நோய்

122. இது தசைகளை மேலும் உறுதியாக்குகின்றது.
a) தாங்கும் தன்மை b) உறுதித்தன்மை உடற்பயிற்சி c) சமநிலைப்பயிற்சி
d) வளைந்து கொடுக்கும் தன்மைப் பயிற்சி

123. இதுவரை கண்டறியப்பட்டுள்ள கனிமங்களின் எண்ணிக்கை
a) 60 b) 105 c) 20 d) 17

124. நைட்ரஜன் நிலைப்படுத்துதலின் போது முதலில் தோன்றும் நிலையான
a) அம்மோனியா b) நைட்ரஜன் c) நைட்ரைட்டு d) நைட்ரேட்

125. கீழ்க்கண்டவற்றுள் தீயவை நான்கின் காரணமல்லாதது எது?
a) வாழுமிட அழிதல் b) அளவுக்கு அதிகப்பயன்பாடு c) இணை பரிணாமம்
d) அயல் தாவர உட்புகுதல்

126. பாலிசாக்கரைடுகளுக்கு ஒரு உதாரணம்
a) ஸ்டார்ச் b) சுக்ரோசு c) குளுக்கோசு d) ஃபிரக்டோசு

127. கீடோசிஸ் என்ற நிலை ஏற்படுவது இதனால்
a) கால்சிடோனின் அளவு குறைவதனால் b) இன்சுலின் அளவு அதிகரிப்பதனால்
c) பாராதார்மோனின் அளவு குறைவதனால் d) இன்சுலின் அளவு குறைவதனால்

128. டார்வின் எழுதிய புத்தகம்
a) பிலாஹபிக் ஜூவாலஜிக் b) ஸிஸ்டடெமா நேச்சரே
c) இனங்களுடையத் தோற்றம் d) பரிணாமத்தில் இயற்கைத் தேர்வு

129. தாவரங்களிலிருந்து நீர் ஆவியாக காற்று மண்டலத்திற்குள் இழுக்கப்படுதல் அழைக்கப்படுவது
a) சுவாசித்தல் b) இடப்பெயர்ச்சி c) நீர்போக்கு d) நீராவிப்போக்கு

130. ஆக்ஸிஜனேற்றத்தின் போது ஒரு $FADH_2$ மூலக்கூறு கொடுப்பது
a) ஒரு ATP b) இரண்டு ATP c) மூன்று ATP d) நான்கு ATP

131. பிணைல் கீட்டோநியூரியா எந்த மரபு நோய்?
a) தசைகளில் அதிகம் உள்ள பினைல் அலனின்
b) தசைகளில் குறைவாக உள்ள பினைல் அலனின்
c) வெளிவரும் சிறுநீர் கருமையாதல் d) சிறுநீரில் சர்க்கரை அளவு அதிகரித்தல்

132. கதிர் இழைகள் உருவாக்கப்பட்டிருப்பது
a) குரோமாட்டின் b) மைக்ரோசோம் c) நுண்குழல்கள் d) சுபரின்

133. குழந்தைப்பருவ பக்கவாதத்தை ஏற்படுத்தும் இளம்பிள்ளைவாதம் _____ வழியாக நுழைகிறது.
a) தோல் b) வாய் மற்றும் மூக்கு c) காதுகள் d) கண்கள்

134. இயற்கையில் கிடைக்கும் சர்க்கரைகளில் அதிக இனிப்பானது
a) குளுக்கோஸ் b) பிரக்டோஸ் c) மான்னோஸ் d) சுக்ரோஸ்

135. உணவானது இரைப்பைக்கு செலுத்தப்படும் விதம்
a) அமீபா போன்ற நகர்வு b) சிலியா போன்ற நகர்வு c) குடல் அலைவு
d) தசை நகர்வு

136. கீழ்க்கண்டவற்றில் மேக்ரோஸ்கோயிக் ஆல்கா
a) ஸ்பைரோகைரா b) குளோரெல்லா c) கிளாமிடோமோனாஸ்
d) லாமினேரியா

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

137. பட்டியல் (1)ஐ, பட்டியல் (2) உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்தெடு.

பட்டியல் (1) (நோய்க்காரணிகள்)

(a) என்டமீபா ஹிஸ்டோலைட்டிக்கா

(b) கிளாஸ்ட்ரியம் டெட்டானி

(c) பார்டெட்டெல்லா பெர்ட்டுஸிஸ்

(d) ஊச்செரிரியா பேன்கிராஃப்டி

பட்டியல் (2) (நோய்கள்)

1. கக்குவான் இருமல்

2. அமிபிக் சீதபேதி

3. ஃபைலேரியாஸிஸ்

4. இரண ஜன்னி

a)

a	b	c	d
2	4	1	3

b)

a	b	c	d
2	4	3	1

c)

a	b	c	d
4	2	1	3

d)

a	b	c	d
2	1	3	4

138. கிரான்ஸ் உள்ளமைப்பு காணப்படுவது

a) C_2 தாவரங்கள் b) C_3 தாவரங்கள் c) C_4 தாவரங்கள் d) CAM தாவரங்கள்

139. பெண் இனப்பெருக்க மண்டலத்தில் அண்டம் கருவுறுதல் நடைபெறும் இடம்

a) செர்விக்ஸ் b) ஆம்புலா பகுதி c) கருப்பை d) இவற்றில் எதுவுமில்லை

140. நுண்மூலகங்களுக்கு தவறான கூற்று எது?

a) அதிகமாகும் போது நசிச்சாகின்றன b) நொதிகளை ஊக்குவிக்கின்றன

c) புரோட்டோபிளாச அங்கங்களை உருவாக்க துணை புரிகின்றன

d) உடல் எடை 10 மில்லிமோல் Kg^{-1} ஐ விட குறைவானவை

141. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் கால்நடைகளின் தொற்றுநோயின் உதாரணம் எது?

a) மலச்சிக்கல் b) பால்காய்ச்சல் c) பசு அம்மை d) வயிற்றுப்போக்கு

142. பாக்டீரியாக்களில் வரையறை நொதிகள் காணப்படக் காரணம்

a) மரபணு குளோனிங் - நடைபெற b) வைரஸ் தாக்குதலில் இருந்து பாதுகாக்க

c) மரபணுகளை மாற்ற d) மரபணுகளின் மறுசேர்க்கைக்காக

143. பின்வரும் கூற்றுகளில் எது/எவை தவறு?

(அ) விலா எலும்புகள் மற்றும் முள் எலும்புகளின் எலும்பு மஜ்ஜையில் (RBC) சிவப்பணுக்கள் உருவாகின்றன.

(ஆ) சிவப்பணுக்கள் (RBC) இரத்தத்திற்கு சிவப்பு நிறத்தையளிக்கும் இரும்பு சத்து கொண்ட ஹீமோ குளோபினைப் பெற்றிருக்கின்றன.

(இ) சிவப்பணுக்களின் (RBC) எண்ணிக்கை குறையும் போது பாலிசைதீமியா என்று கூறப்படுகிறது.

a) அ மட்டும் b) அ, இ மட்டும் c) இ மட்டும் d) ஆ மட்டும்

144. கீழ்கண்டவற்றை இணைக்கவும்

தொகுதி 1	தொகுதி 2
பாலிதீன்	சிதையக்கூடியது
காகிதம்	மாசுபடுத்தும் வாயு
புகை	சிதையாதது
கார்பன் மோனாக்ஸைடு	மாசுபடுத்தும் துகள்

a) 1d :2c :3b ;4a b) 1b:2c:3d:4a c) 1c:2a:3d:4b d) 1c:2d:3a:4b

145. இனி வருங்காலங்களில் தோல் தொடர்பான வியாதிகள் அதிகமாகும்,காரணம்

a) காற்று மாசுபாடு b) டிடர்ஜென்டுகள் பயன்பாடு c) நீர் மாசுபாடு

d) ஓசோன் படல சிதைவு

146. மகரந்த மாத்திரைகள் பயன்படுத்தப்படுவது

a) கூடுதல் உணவாக b) வாழுமிடத்திற்கு வெளியே பாதுகாக்க

c) செயற்கை கருவூட்டலுக்கு d) கலப்பினங்கள் சோதனைக்கு

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்

RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

147. மரபணு மாற்றப் பயிர்களின் பாதுகாப்பு மற்றும் மக்களுக்கு அவற்றை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை கட்டுப்படுத்தும் இந்திய அரசின் அமைப்பு
a) உயிரி பாதுகாப்பு குழு b) இந்திய கவுன்சில் குழு
c) மரபுப் பொறியியல் அனுமதி குழு d) மரபணு மாற்ற ஆய்வுக் குழு

148. ELISA முதன்மையாக இதற்குப் பயன்படுகின்றது
a) திடீர் மாற்றங்களைக் கண்டறிய b) நோய்க்கிருமிகளைக் கண்டறிய
c) விரும்பத்தக்க பண்புகளைடைய விலங்குகளைத் தேர்வு செய்ய
d) விரும்பத்தக்க பண்புகளையுடை ய தாவரங்களைத் தேர்வு செய்ய

149. இரண்டாம் நிலை உற்பத்தித்திறனை இவ்வாறு வரையறுக்கலாம்.
a)
சார்பூட்ட உயிரிகள் அல்லது நுகர்வோர்களின் திசுக்களில் சேமித்து வைக்கப்படும் ஆற்றல்.
b) சேமிக்கப்படும் உயிர்த்திரள் ஆற்றல் c) ஆற்றல் உற்பத்தி திறன்
d) ஆற்றல் பயன்படுத்தப்படும் திறன்

150. குவி நரம்பமைவு காணப்படும் தாவரம்
a) இலந்தை b) மாவிலை c) கல்வாழை d) ஆமணக்கு

151. CO_2 போக்குவரத்திற்கு நொதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. அவை இரத்தத்தில் பைகார்பனேட்டுகளாக மாறுகிறது.
a) கார்பாக்ஸிபெப்டிடேஸ் b) சக்சினிக் டிஹைட்ரோஜெனெஸ்
c) கார்பானிக் அன்ஹைட்ரேஸ் d) லேக்டே

152. உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி ஆரோக்கியமான இனப்பெருக்கம் என்பது
a) ஆரோக்கியமாக, பணிகளை மேற்கொள்ளும் இனப்பெருக்க உறுப்புகள்
b) ஆரோக்கியமான உடல்
c) இனப்பெருக்கம் சம்பந்தப்பட்ட அனைத்திலும் ஆரோக்கியமாக இருப்பது
d) ஆரோக்கியமான இனப்பெருக்க உறுப்புக்களை கொண்ட உடல்

153. காப்பு செல்களுக்குள் நீர் புகுந்து, வெளியேறும் செயல் முறையை விளக்கும் கோட்பாடு(கள்)
a) ஸ்டீவர்டின் தாச-சர்க்கரை இடை மாற்றக் கோட்பாடு
b) ராஷ்க்கின் செயல்மிக்க K* கடத்துதல் கோட்பாடு c) ஸ்கார்த்தின் PH கோட்பாடு
d) மேற்கண்ட அனைத்தும்

154. கிளைகள் அல்லாமல் நகரிழைகள் கொண்ட தாலஸ் காணப்படும் உயிரினம்
a) கிளாமிடோ மோனாஸ் b) கிளடோஸ்போரா c) வால்வாக்ஸ்
d) ஸ்பைரோகைரா

155. பின்வருவனவற்றுள் எது/எவை தவறு? முழுமையற்ற ஓங்கு தன்மையில்
(அ) தனித்து பிரிதல் விதியின் செயல்நுட்பம் நடைபெறுகிறது
(ஆ) ஓங்கு தன்மை விதி நடைபெறுகிறது
(இ) F2 வின் ஒரே புறத்தோற்ற விகிதமுமா ஜீன் ஆக்க விகிதமும் பெற்றுள்ளது
(ஈ) இரு பெற்றோர் வகைகளுக்கும் இடைப்பட்ட கலப்பு வகையாக F1 காணப்படுகிறது
a) அ மற்றும் ஆ மட்டும் b) அ மட்டும் c) ஆ மட்டும் d) அ,ஆ, மற்றும் ஈ மட்டும்

156. குளுக்ககான் மற்றும் இன்சுலின்
a) ஒரே மாதிரி செல்களால் சுரக்கப்படுகிறது.அந்த பணியை செய்கிறது
b)
ஒரே மாதிரி செல்களால் சுரக்கப்படுகிறது.ஆனால் மாறுபட்ட பணியை செய்கிறது
c) எதிராக சுரக்கிறது.ஒரே மாதிரி பணியை செய்கிறது
d)
வெவ்வேறு செல்களால் சுரக்கப்படுகிறது.ஆனால் வேறுபட்ட பணியை செய்கிறது

157.

பகுதி-I		பகுதி-II	
அ.	அர்ரீனோடோகி	i	சொனோபியா

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

பகுதி-I		பகுதி-II	
ஆ.	தெலிடோகி	ii.	ரீடியா லார்வாக்கள்
இ	ஆம்ஃபிடோகி	iii.	தினீக்கள்
ஈ.	இளம்உயிரி கன்னி இனப்பெருக்கம்	iv	ஏஃபிஸ்

a) அ-ii,ஆ-iv,இ-iii,ஈ-i b) அ-iv,ஆ-ii,இ-i,ஈ-iii c) அ-iii,ஆ-iv,இ-ii,ஈ-i d) அ-iii,ஆ-i,இ-iv,ஈ-ii

158. யபுதா என்பவர் இப்பூஞ்சையிலிருந்து இச்செயல் தன்மை கொண்ட வேதி பொருளைப் பிரித்தெடுத்து ________ எனப் பெயரிட்டார்.
a) ஜிப்ரில்லா பியூஜிகுராய் b) ஜிப்ரலின் c) ஜிப்ரலிக் அமிலம்
d) செல்சுவாச வீதம்

159. தாவரங்களில் சேலத்தை உண்டாக்கும் செல் வகைகளில் உயிருள்ளவை
a) சைலக்குழாய்கள் மட்டும் b) சைலக்குழாய்களும் சைலம் பாரன்கைமாவும்
c) ட்ரக்கீடுகள் மட்டும் d) சைலம் பாரன்கைமா மட்டும்

160. வேர்த்தாவிகளின் காணப்படும் பிளாஸ்மாசவ்வு தன் ஊடு செல்ல
a) அனங்கக உப்புக்களையும், அங்கக உப்புகளையும் அனுமதிக்காது
b) அனங்கக உப்புக்களை அனுமதிக்கும். அங்கக உப்புக்களை அனுமதிக்காது
c) அனங்கக உப்புக்களையும் அங்கக உப்புக்களையும் அனுமதிக்கும்
d) அங்கக உப்புக்களை அனுமதிக்கும், அனங்கக உப்புக்களை அனுமதிக்காது

161. கீழ்கண்ட ஜோடி ஹார்மோன்களில் எவை இலக்கு செல்லின் செல் சவ்வினில் எளிதாக நுழைந்து ஏற்பிகளிடம் இணைகிறது?
a) சொமேட்டோஸ்டேட்டின், ஆக்ஸிடோசின் b) கார்டிசோல், டெஸ்டோஸ்டிரோன்
c) இன்சுலின், குளுக்கோகான் d) தைராக்ஸின், இன்சுலின்

162. சாதகமற்ற சூழ்நிலையைத் தாங்க ஸ்போர்கள் எவ்வாறு உதவுகின்றன
a) மெல்லிய சுவரால் சூழப்பட்டுள்ளன. b) தடிமனான சுவரால் சூழப்பட்டுள்ளன.
c) வழவழப்பான பொருளால் சூழப்பட்டுள்ளன. d) உலர்ந்து போகின்றன

163. கீழ்க்கண்டவற்றுள் முதன்மை நிறமியாக கருதப்படுவது எது?
a) கரோட்டினாய்டுகள் b) சாந்தோபில்கள் c) பச்சையம் 'a' d) பச்சையம் 'b'

164. நன்னீர் மற்றும் கடல்களில் மிதந்து காணப்படும் ஒரு செல் தாவரங்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறது
a) ஆல்காக்கள் b) பைட்டோபிளாங்டன்கள் c) சூப்ளாங்டான்கள்
d) இவற்றில் எதுவும் இல்லை

165. ________கண்ணின் நிறம் உள்ள பகுதியாகும்.
a) கோராய்டு உறை b) ஐரிஸ் c) வட்டத்தசைகள் d) ஆரத்தசைகள்

166. இருவித்திலைத் தாவர இலைகள் ______ நரம்பமைவுடன் காணப்படும்
a) பக்கவாட்டு b) இணைப்போக்கான c) வலைப் பின்னல் d) கிளை

167. அகச்செவியின் காக்ளியாக அரை வட்டக் கால்வாய் மற்றும் யூட்டரிகுலஸ் பகுதி
a) இயக்க உணரவேற்பிகள் b) வேதி உணரவேற்பிகள்
c) வெப்ப உணரவேற்பிகள் d) ஒளி உணரவேற்பிகள்

168. தண்டுவடம் இரு விரிவுகளை கொண்டுள்ளது. ஒன்று செர்வைக்கல் பகுதியில் உள்ளது. மற்றொன்று உள்ள பகுதி
a) லம்பார் பகுதி b) தொராசிக் பகுதி c) பெல்விக் பகுதி d) சேக்ரல் பகுதி

169. ஒட்டுண்ணி தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
a) தூத்துமக் கொத்தான் b) லைக்கன் c) மைக்கோரைசா d) அகாரிகஸ்

170. இன்சுலின் எவ்வாறு முதன்மை முன்னோடி இன்சுலினிலிருந்து வேறுபடுகிறது?
a) A, B மற்றும் C துண்டங்களை கொண்டிருப்பதால்
b) B மற்றும் C துண்டங்களை மட்டும் கொண்டிருப்பதால்
c) A மற்றும் C துண்டங்களை மட்டும் கொண்டிருப்பதால்
d) A மற்றும் B துண்டங்களை மட்டும் கொண்டிருப்பதால்

171. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளின் எது ஒன்று மிதவெப்ப மண்டலக் காடுகளுக்கு எடுத்துக்காட்டு அல்ல?

a) வறண்ட இலையுதிர் காடுகள் b) மத்திய தரைக்கடல் காடுகள்
c) உலர் ஊசியிலைக் காடுகள்
d) மிதவெப்ப மண்டல அகன்ற இலை மழைக்காடுகள்

172. கார்க் பகுதியை தோற்றுவிப்பது
a) கார்க் கேம்பியம் (ஃபெல்லோஜென்) b) வாஸ்குலார் கேம்பியம் c) ஃபுளோயம்
d) சைலம்

173. பின்வருவனவற்றை பொருத்துக

A	B
1.XO வகை	a.பெண் ஹெட்டிரோகேமிட்டி
2.XY வகை	b.பெண் பறவை
3.ZZ வகை	c.ஆண் ஹெட்டிரோகேமிட்டி
4.ZW வகை	d.வெட்டுக்கிளி

a) 1a:2b:3c :4d b) 1d :2c :3b :4a c) 1b:2c:3a :4d d) 1b:2a :3c :4d

174. திடீர் மாற்றம் ஏற்படக் காரணம்
a) ஜீன்களின் அசாதாரணமான மாற்றங்கள்
b) நுண்ணுயிர்களால் ஏற்படும் தொற்றுதல் c) உணவுக் காரணி
d) பெறப்பட்ட பண்புகள்

175. நைட்ரஜன் நிலைப்படுத்தலில் லெக்-ஹீமோகுளோபினின் பங்கு
a) N_2 வை NH_3யாக மாற்றுதல் b) NH_3 யை N_2 வாக மாற்றுதல்
c) நைட்ராஜினேஸ் செயல்பாட்டிற்கு ஆக்சிஜன் வழங்குதல்
d) நைட்ராஜினேசை ஆக்சிஜனிடமிருந்து பாதுகாத்தல்

176. பெப்ஸின் புரதத்தின் மீது செயல்பட தேவையான ஊடகம்
a) அமிலத்தன்மை b) காரத்தன்மை c) நடுநிலை d) எதுவுமில்லை

177. அமினோ அமிலமானது கார்பன் டை ஆக்சைடு ஆக கார்பாக்சில் தொகுதியை இழப்பதால் உருவாகுவது
a) குளுக்கோஸ் b) ஹிஸ்டமைன் போன்ற அமைன்கள் c) ஆல்ஹகால்
d) நைட்ரஜன் காரம்

178. வளர்கரு ப்ளாசக் (Germplasm) கோட்பாட்டைக் கூறியவர் யார்?
a) டார்வின் b) ஆகஸ்ட வீஸ்மேன் c) லாமார்க் d) ஆல்ஃப்ரட் வாலாஸ்

179. அதிக அளவு கனிமங்கள், வைட்டமின்கள் மற்றும் புரதங்களோடு தாவரங்களை வளர்க்கும் முறை என்பது
a) நுண்ணிய கலப்பின் இனப்பெருக்கம் b) உடல் சார்ந்த இனக்கலப்பு
c) உயிரி வலுவூட்டம் d) உயிரி உருப்பெருக்கம்

180. காகித உற்பத்தியில் மிகுதியாய் பயன்படும் ஜிம்னோஸ்பெர்ம்
a) அரக்கேரியா b) அகத்திஸ் c) பைனஸ் d) எபிட்ரா

181. ஜீன்களில் கூட்டுச் செயல்கள் பற்றிய கீழ்வரும் கூற்றுக்களை கவனித்து சரியான பதிலை கண்டுபிடி
(அ) மெண்டலின் அடிப்படை விகிதமான 9:3:3:1 எல்லாவற்றிக்கும்
(ஆ) பல ஜீன் ஜோடிகள் ஒரு பண்பை கட்டுப்படுத்தும்
(இ) நிரப்பு ஜீன்களின் கூட்டுச் செயலானது இரு ஜோடி அல்லீகள் அல்லாத ஒடுங்கு தன்மை ஜீன்களுக்கிடையில் செயல்படுகிறது.மேலே குறிப்பிட்டுள்ள கூற்றுகளில்
a) சரியானது ஆனால் (ஆ) மற்றும் (இ) தவறானவை
b) (அ) மற்றும் (ஆ) சரியானவை (இ) தவறானவை
c) (இ) சரியானது ஆனால் (அ) மற்றும் (ஆ) தவறானவை
d) (ஆ) சரியானது ஆனால் (அ) மற்றும் (இ) தவறானவை

182. காடுகள் அழிக்கப்படுதல் எனப்படுவது
a) காடுகளற்ற பகுதிகளில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
b) காடுகள் அழிந்த பகுதிகளில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
c) குளங்களில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
d) தாவரங்கள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை அகற்றுதல்

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

183. சுவர்ச்சூல் ஒட்டு முறையில் சூல் ஒட்டுத்திசு
   a) இரு சூலிலைகள் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது
   b) சூற்பையின் அடிப்பகுதியில் பூத்தளத்தின் நுனியில் வளர்ந்திருக்கிறது
   c) சூற்பையின் மைய அச்சில் அமைந்து உள்ளது.
   d) சூற்பைச்சுவரின் கீழ்ப்புற இணைப்பில் காணப்படுகிறது.

184. C_3 சுழற்சியின் போது ஒவ்வொரு CO_2 மூலக்கூறு நிலைநிறுத்தலுக்கும் ஒடுக்க மற்றும் மீண்டும் உருவாக்கும் வினைகளுக்குத் தேவைப்படுவது
   a) 3ATP மற்றும் $2NADPH_2$ b) 2ATP மற்றும் $2NADPH_2$ c) 2ATP மற்றும் $3NADPH_2$
   d) 3ATP மற்றும் $3NADPH_2$

185. ஹிருடின் ஜீன் உட்செலுத்தப்படுவது
   a) அக்ரோபாக்டீரியம்   b) Bt பருத்தி   c) பிராசிக்கா   d) டிரான்ஸ்போசான்கள்

186. கீழ்க்கண்டவற்றுள் இன்கிபின் என்பதற்கு தொடர்புடைய வாக்கியம் எது?
   a)
   அண்டத்தின் கிராணுலோஸ் செல்களால் உற்பத்தி செய்யப்படும் மற்றும் FSH சுரத்தலைக் கட்டுப்படுத்தும்
   b)
   அண்டத்தின் கிராணுலோஸ் செல்களால் உற்பத்தி செய்யப்படும் மற்றும் LH சுரத்தலைக் கட்டுப்படுத்தும்
   c)
   விந்தகத்தின் செவிலியர் செகளால் உற்பத்தி செய்யப்படும் மற்றும் LH சுரத்தலைக் கட்டுப்படுத்தும்
   d) LH,FSH மற்றும் புரோலேக்டின் சுரத்தலைக் கட்டுப்படுத்தும்

187. ஒவ்வொரு மையோசின் மூலக்கூறும் ________ எனும் மோனோமெரால் ஆனது.
   a) மையோசின்   b) தடித்த இழைகள்   c) மீரோமையோசின்   d) கோளவடிவ

188. புரோபயாட்டிக்ஸ் என்பது
   a) உணவு ஒவ்வாமை   b) பாதுகாப்பான நோய் எதிர்ப்பு பொருள்
   c) புற்றுநோய் உருவாக்கும் நுண்ணுயிரி
   d) உயிருள்ள நுண்ணுயிரியியல் உணவு துணைப்பொருள்

189. ஒளி அளவு மற்றும் ஒளி காலத்துவத்தின் வேறுபாடுகளைச் சார்ந்திராமல் பல உயிரினங்களில் நடைபெறுவது.
   a) உண்ணுதல்   b) வளர்ச்சி   c) இனப்பெருக்கம்   d) வலசை போதல்

190. _______ எலும்புத்தசையுடன் இணையும் வெளிச்செல் இயக்கு நியூரான்களின் செல் உடலைக் கொண்டுள்ளது.
   a) முதுகுப்புற கொம்பு பகுதி   b) வயிற்றுப்புக்கொம்பு பகுதி
   c) பக்க வாட்டு கொம்பு பகுதி   d) கீழ் நோக்கு கற்றைகள்

191. பிறப்பு மற்றும் இறப்பிற்கிடையேயான விகிதம்
   a) உயிரின தொகை விகிதம்   b) கணக்கீடு விகிதம்   c) மிகமுக்கியமான விகிதம்
   d) அடர்த்தி விகிதம்

192. மூளையை உருவாக்கும் செல்களின் வகையிலிருந்தே உருவாகும் மற்றொரு உறுப்பு
   a) கணையம்   b) தைராய்டு   c) அட்ரீனல் மெடுல்லா
   d) பிட்யூட்டரியின் முன்கதுப்பு

193. தைரோகாஸ்சிடோனின் என்னும் புரத ஹோர்மோனை சுரப்பது எது?
   a) தைராய்டு சுரப்பி   b) தைமஸ் சுரப்பி   c) அட்ரீனஸ் சுரப்பி
   d) பாரா தைராய்டு சுரப்பி

194. மனித இரத்தத்தில் குடி கொண்டு மலேரியா நோய் உண்டாக்கும் ஒட்டுண்ணி எது?
   a) எண்டமீபா ஹிஸ்டாலிக்க   b) எர்சினியா பெஸ்டிஸ்   c) பிளாஸ்மோடியம்
   d) B ஆர்போ வைரஸ்

195. ஆர்க்கிபாக்டீரியம் எது?
   a) அசட்டோபாக்டர்   b) எர்வினீயா   c) டிரிப்போனிமா
   d) மெத்தனோ பாக்டீரியம்

இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308

196. தாவர உலகத்தின் இருவாழ்விகள் என அழைக்கப்படுவது
a) ஆல்கா b) பிரையோபைட்டுகள் c) டெரிடோபைட்டுகள்
d) ஜிம்னோஸ்பெர்ம்கள்

197. இரத்தச்சிவப்பணுக்களின் புறப்பரப்பில் A மற்றும் B ஆன்டிஜன்கள் உள்ள ஒரு நபர் எந்த இரத்த வகுப்பைச் சார்ந்தவர்?
a) A b) B c) AB d) O

198. செல்களின் ஆற்றல் நிலையம் எனப்படுவது
a) ரைபோசோம்கள் b) மைட்டோகாண்ட்ரியா c) கோல்கி உறுப்பு
d) பெராக்சி சோம்கள்

199. தரத்தைப் பற்றி கருதாமல், வகைப்பாட்டின் ஒவ்வொரு அலகு
a) டாக்சான் b) வகை c) சிற்றினம் d) ஸ்ட்ரெயின்

200. அரச்சீரமைப்பு கொண்ட முதிர் விலங்குகள் மற்றும் இருபக்க சமச்சீரமைப்பு கொண்ட அதன் லார்வாக்களும் எந்த தொகுதியில் உள்ளது?
a) குழியுடலிகள் b) துளையுடலிகள் c) முட்தோலிகள் d) மெல்லுடலிகள்



இதன் விடைகள் விலை ரூ.50 மட்டும்
RAVI TEST PAPERS & NOTES, WHATSAPP – 8056206308